BRITISH TAMIL EXAMINATION BOARD (BTEB)
பிரித்தானிய தமிழ்மொழிப் பரீட்சை சபை
www.bteb.org.uk

TAMIL LANGUAGE

# GRADE 7

# READING EXAMINATION - T07R

**Version A**

Additional materials:
Soft pencil (type B or HB)
Soft clean eraser

**TIME** 1 hr and 30 minutes

## INSTRUCTIONS TO CANDIDATES

Do not open this booklet until you are told to do so.

Answer **all** questions.

Write your name, Centre number and candidate number in the spaces on this page.

**Write your answers on the question paper itself.**

Use pencil

At the end of the test you must hand in the question paper to your supervisor.

Dictionaries must not be used.

| Date | Centre Name | Centre Number |
|---|---|---|
| / / | | |

| Candidate : Name | Candidate : Number |
|---|---|
| | |

**This question paper consists of 7 printed pages and 1 blank page.**

## T07R - PART I

**Questions 1-5**

**Look at the text in each question. Mark the correct answer by choosing the Letter A, B or C.**

1. மக்கள் தொகைப்பெருக்கம், குடிநகர்வு, வணிகமயமாதல் போன்ற பல காரணிகளால் சூழல் மாசடைகின்றது. இதில் காற்று, நீர், நிலம், விண்வெளி என்பனவும் அடங்குகின்றன.

   What does this indicate?
   A. Global Warming
   B. Earth quake
   C. Environment Pollution

2. பூமியின் மேற்பரப்பில் ஏற்படும் அதிர்வே நிலநடுக்கம் ஆகும். இதனால் பாதிப்புக்கள் ஏற்படுவதோடு உயிர் இழப்பும் உண்டாகும்.

   What does this indicate?
   A. Deforestation
   B. Earth quake
   C. Criminal Actions

3. குற்றச் செயல்கள் பல்வேறு சூழ்நிலைகளில் நடைபெறுகின்றன. மக்கள் அமைதியாக வாழ்வதற்கு குற்றவியல் தடுப்பு நடவடிக்கைகள் அவசியமானது

   What does this indicate?
   A. Criminal Actions
   B. Global warming
   C. Deforestation

4. உடலின் வெப்பத்தைச் சீராக்க நீர் உதவுகின்றது. சுத்தம் செய்யவும், விவசாயம் செய்யவும் தொழிற்சாலைகளுக்கான தேவைகளுக்கும் பயன்படுகின்றது.

   What does this indicate?
   A. Earthquake
   B. Water utilities
   C. Environment Pollution

5. மரங்கள் செடி கொடிகளை வளர்க்க வேண்டும். காடுகள் அழிப்பதை நிறுத்த வேண்டும்

   What does this indicate?
   A. Global Warming
   B. Water utilities
   C. Deforestation

## T07R -PART II

**Questions 6-10**

**Read the following statements and decide which one applies to each text.**

| | |
|---|---|
| **A** | வாகனங்களை ஓட்டுபவர் இடப்புறம் ஓட்டிச் செல்வர். வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த சிவப்பு, மஞ்சள், பச்சை நிறங்களிலான விளக்குகள் வைக்கப்பட்டிருக்கும். சிவப்பு விளக்கு எரியும்போது வாகனம் நிறுத்தப்படவேண்டும் |
| **B** | பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் ஏறி இறங்குவர். பேருந்தின் முன்பக்கமோ பின்பக்கமோ சென்று பாதையைக் கடக்கக்கூடாது. பாதையில் கோடுகள் போடப்பட்டிருக்கும் இடத்தில் கடக்கவேண்டும். |
| **C** | மக்கள் நடப்பதற்கு நடைபாதையைப் பயன்படுத்த வேண்டும். போக்குவரத்து மிகுதியாகவுள்ள பாதைகளில் பாதுகாப்பாக நடந்து செல்ல நடை மேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. |

6. Cross the road at the crossing road marks only. ☐

7. Walking through over head bridge ☐

8. Stop vehicles at red signal. ☐

9 Drive vehicles on the left side ☐

10. Use the foot path ☐

**[TURN OVER]**

© BTEB 2014 TO7R VERSION A

## T07R - PART III

**Questions 11-15**

**Read the paragraph and answer the questions (11-15)**

கணினி என்பது மனிதனின் எல்லா நிலைகளிலும் பயன்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது. பாடசாலைகள், அலுவலகங்கள், ஆராய்ச்சிக்கூடங்கள் என எல்லா இடங்களிலும் தகவல்களைப் பெற்று அதனைச் சேகரித்து வைக்க கணினி உதவுகிறது. கணினியின் தேவை அடிப்படையானதொன்றாகி விட்டது. இணையத்தின் வருகைக்குப் பின் அதன் தேவை பன்மடங்காகப் பெருகிவிட்டது.

இணையத்தின் மூலம் செய்திகளை அறிந்து கொள்வதோடு இடைவிடாது இருபத்துநான்கு மணிநேரமும் கேட்டு மகிழவும் வானொலிகள் இருக்கின்றன. மேலும் மருத்துவத்துறையிற் சிலவகைச் சத்திர சிகிச்சைகள் கணினியின் உதவியோடு செய்யப்பபடுகின்றன. விண்வெளி ஆய்வுக்கும் பெரிதும் உதவி வருகின்றது.

கணினி மூலமாக மொழி அறிவை பெருக்கிக் கொள்வதோடு பல தொழில் நுட்பத்திறனையும் வளர்ப்பதற்கு உதவுகின்றது. பாடசாலையோடு கல்வி நின்றுவிடாமல் இணையத்தின் மூலம் பட்டப்படிப்பை மேற்கொள்ளவும் வழிசெய்கிறது. வீட்டில் இருந்தபடியே வேலை செய்து பணம் சேகரிக்கவும் பல திட்டங்களை இணையம் வழங்குகின்றது

11. We can store data in the computer.

A. Right B. Wrong C. Not in the text.

12. We can’t listen to Radio via Internet

A. Right B. Wrong C. Not in the text.

13. We can improve the technology.

A. Right B. Wrong C. Not in the text.

14. We can study through the Internet to obtain a degree

A. Right B. Wrong C. Not in the text.

15. Satellites are used for research

A. Right B. Wrong C. Not in the text.

## Questions 16-20

## Read the paragraph and answer the questions (16-20)

நகரத்தில் மக்கள் நெருக்கமாகக் குடியிருப்பார்கள். தனிவீடு, அடுக்குமாடி, தொடர் மாடி என பல்வேறுபட்ட குடியிருப்புக்களைக் காணலாம். பெரும்பாலான குடும்பங்களில் கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்வார்கள். தமது பிள்ளைகளை, பிள்ளைகள் பராமரிப்பு நிலையத்தில் சேர்த்து விடுவார்கள். மேலும் இங்கு மக்கள் தொகை உயர்வாகக் காணப்படுவதால் வேலையில்லாப் பிரச்சனையும் ஏற்படுகிறது. உயர்கல்வித்தரம் உள்ளவர்களுக்கே வேலை வாய்ப்புகள் பெறக்கூடியதாக உள்ளது. கல்வி கற்றவர்களாய் இருந்தாலும் கூட கல்வித் தராதரத்திற்குத் தொடர்பற்ற வேலைகளைச் செய்து வருமானம் ஈட்டுகிறார்கள். நகரத்தில் பல மாடிக்கட்டடங்கள் எங்கும் பரந்திருக்கும். நகரத்தில் மின்சாரம், நீர் வசதிகளோடு தொலைத்தொடர்புச் சாதனங்களின் பயன்பாடும் மிகுதியாகக் காணப்படும். நகரத்தில் தொலைபேசி, தொலைக்காட்சி, கணினி போன்றவற்றோடு மின்பொறி உபகரணங்களை பிள்ளைகள் முதற்கொண்டு பெரியவர்கள் வரை பயன்படுத்துவதைக் காணலாம்.

கிராமம் என்றாலே பச்சை வண்ணமாய் அமைந்திருக்கும் மரங்கள், வயல்வெளிகள், தோட்டங்கள், புல்வெளிகள் என்பனதான் கண்முன் நிற்கும். இங்கு மக்களின் குடியிருப்புக்கள் ஒன்றிற்கொன்று தொலைவில் இருக்கும். பறவைகளின் இன்னிசையும் மிருகங்களின் கூப்பிடு குரலும் மனதிற்கு இன்பம் பயக்கும் பிள்ளைகள் மாலை நேரங்களில் ஒன்று சேர்ந்து கிளித்தட்டு, கிட்டிப்புள், பட்டம் விடுதல் போன்ற பல விளையாட்டுக்களை விளையாடுவர். இங்கு பெரும்பாலும் தமக்குத் தேவையான உணவுகளை தோட்டம் செய்வதன் மூலம் தாங்களே உற்பத்தி செய்து கொள்வார்கள்.

16. Which of the following statement describe the city houses? ☐

    A. Each and every houses are far apart

    B. House are congested

    C. There are no apartments

17. What is green in a village? ☐

    A. Fields

    B. Buildings

    C. Fence

© BTEB 2014 

18. What is the main problem faced in a city?

A. lack of houses

B. lack of electricity

C. Unemployment

19. How do the villagers get their food?

A. Farming

B. From import

C. Business

20. Which one of these is not used by city people?

A. Telephone

B. Computer

C. Kite

## T07R - PART V

**Questions 21-25**

**Read the following text and choose from the list (A-E). The sentence which best summarises each part (21-25).**

A. Parents worry about the children.

B. Communication between parents and young people.

C. Children should have good relationship with friends.

D. Children do wrong things without the knowledge of the parents.

E. Parents don't respect their children's feelings.

21. ☐ இளைஞர்கள் பெற்றோரிடம் மனம்விட்டுப் பேசவேண்டும். எந்த விடயமானாலும் கலந்து பேசும்போது குடும்பத்தில் சந்தோசமும் அன்பும் ஏற்படும்.

22. ☐ பெற்றோர் தமது பிள்ளைகள் குறித்து கவலையும் வேதனையும் அடையும்போது உணர்ச்சிவசப்படுவார்கள். அவர்கள் பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்திற்காகக் கஷ்டப்படுவார்கள்.

23. ☐ இளைஞர்கள் பலர் பெற்றோருக்குத் தெரியாமல் தடைவிதித்த காரியங்களைச் செய்கின்றார்கள். பின்பு பெற்றோர் தங்களை புரிந்துகொள்ளவில்லை எனப் புலம்புகின்றனர்.

24. ☐ இளைஞர்கள் சரியான நேரத்திற்கு வீட்டிற்கு வருவதையே பெற்றோர்கள் எதிர்பார்ப்பார்கள். நேரம் தாமதித்து வருவதும் தவறான சகவாசமும் தீங்கை விளைவிக்கக்கூடியவை.

25. ☐ பெற்றோர் தங்களிடம் குறை காண்பதிலேயே குறியாய் உள்ளார்கள் என்றும் தங்கள் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிப்பதில்லை என்றும் இளைஞர்கள் முறையிடுகின்றனர்.

BLANK PAGE